# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 09
## First Term Examination – 2020 – Grade 09

| செயன்முறைத்தொழில்நுட்பத்திறன்கள் | | T | I, II, | இரண்டு மணித்தியாலம் 30 நிமிடங்கள்<br>Two Hours 30 minutes |
|---|---|---|---|---|

சுட்டெண்
Index No

**செயன்முறைத்தொழில்நுட்பத்திறன்கள்**

பகுதி 1

மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. நகரங்களில் வசிப்போர் பயிர்ச்செய்கை மேற்கொள்வதிலுள்ள இடர்பாடு

i. தொழிநுட்ப வளர்ச்சி உயர்வாக காணப்படுதல்
ii. போதியளவு இடவசதி காணப்படுதல்.
iii. சூரிய ஒளி அதிகமாகப்படுதல்.
iv. மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பை கொண்டிருத்தல்.

02. பூச்சிகளை விரட்டக்கூடிய தாவரம் அல்லாதது

i. செவ்வந்தி.
ii. பாவட்டை.
iii. முள்ளங்கி.
iv. கோவா.

03. நீர்க்காப்புக்கு உகந்த முறை அல்லாதது

i. மழைவீழ்ச்சிக்கோலத்துக்கு ஏற்ப பயிரிடல்.
ii. மண்ணுக்கு அசேதனப்பொருட்களை சேர்த்தல்.
iii. காலை அல்லது மாலை நேரத்தில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல்.
iv. மழைநீரை சேகரித்து பயன்படுத்துதல்.

04. சர்வதேச தரக்கட்டளைகள் நிறுவனத்தைக் குறிக்கும் குறியீடு

i. ISI
ii. SLS
iii. ISO
iv. SLO

05. இலங்கையின் மத்திய மாகாணத்தில் பயிர்செய்வதற்கு பொருத்தமற்ற பயிர்

i. பெயர்ஸ
ii. தேயிலை
iii. ஸ்ரோபெரி
iv. அரிசி

06. கழிவு முகாமைத்துவத்துக்கு பொருத்தமான வழிமுறை

i. மீளப்பயன்படுத்தல்.
ii. மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்.
iii.பாவனையை குறைத்தல்.
iv. மேற்கூறிய யாவும் சரி.

07. ஒரேசாடியில் நாட்டிப்பயிரிடக்கூடிய பயிர்வகை

i. கறிவேப்பிலை,ரம்பை,சேம்பு.
ii. இஞ்சி,மஞ்சள்,தக்காளி.
iii. ரம்பை,சேம்பு,வெண்டி.
iv. கறிவேப்பிலை,ரம்பை,கத்தரி.

08. முளைகட்டிய வித்துக்களை எத்தனை நாட்களில் உணவாக உட்கொள்ளமுடியும்

i. 2-3 நாட்கள்.
ii. 3-5 நாட்கள்.
iii. 5-7 நாட்கள்.
iv. 4-6 நாட்கள்.

09. சாடிகளில் நாட்டி ஆகாயப்பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்ற பயிர்

i. வல்லாரை ii. ஸ்ரோபெரி iii. தக்காளி iv. எலுமிச்சை

10.நேரடி சூரிய ஒளி தேவைப்படும் நிலைக்கான குறியீடு

i.  ii.  iii.  iv. 

11.நாற்றுக்களை விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்படும் விளக்க கையேடுகளில் அடங்காத தகவல்

i. வகை ii. விலை iii. வயது iv. காயின் நீளம்

12.எலுமிச்சம் பழத்தை போகம் தப்பியகாலத்திலும் சந்தைப்படுத்தும் நுட்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடியது

i. ஊறுகாயிடல். ii. மண்ணில் புதைத்தல்.
iii. தேனில் இடல். iv. குளிர்சாதனப்பெட்டியிலிடல்.

13.பயிர் விளைச்சல் சார்ந்த உற்பத்திப் பொருள் எது?

i. தாவர நாற்றுக்கள் ii. கீரைக்கட்டுக்கள். iii. தக்காளிப்பழங்கள். iv. முளைகட்டிய பயறு.

14. வழங்கல் சங்கிலியில் முதலில் காணப்படுவது

i. உற்பத்தி. ii. சந்தைத்தேவைகளை இனங்காணல்.
iii. வழங்குநர். iv. விநியோகித்தல்.

15. வேலியமைத்தலுக்கு பொருத்தமான தாவரவகை

i. கத்தரி ii. தக்காளி iii. புதினா iv. கிளிசிடியா

16.செயற்திட்டத்திற்குரிய நிதி ஆவணங்களைத் தயாரித்தல் அல்லது அட்டவணை தயாரித்தலுக்கு பயன்படுத்தக்கூடிய மென்பொருள்

i. MS Excel ii. MS Power Point iii. MS Project iv. Gantt Project

17.படிக்கட்டுமுறை பயிர்ச்செய்கையில் மண்ணரிப்பைக்கட்டுப்படுத்த நடக்கூடிய தாவரம்

i. வல்லாரை ii. கிளிசிடியா iii. கிலுகிலுப்பை iv. குப்பைமேனி

18. பல்லாண்டுத்தாவரங்களின் கிளைகள், வேர்கள் நீண்டகாலமாகக் கத்தரித்து பராமரிப்பதன்மூலம் அலங்காரமான சிறிய தாவரங்களைப்பெறல்

i. கோக்கிடாமா ii. பொன்சாய் iii. நுண்பூங்கா iv. மழலையர் பூங்கா

19. சுட்டுத்துண்டில் அடங்காதது

i. விலை ii. உற்பத்தியாளரின் வயது iii. உற்பத்தி திகதி iv. போசனைக்கூறுகள்

20. கூட்டெரு தயாரித்தலில் பயன்படுத்தக்கூடிய பதார்த்தம்/பதார்த்தங்கள்

i. இலை குழை. ii. பழுதடைந்த காய்கறி.
iii. உயிரினங்களின் மலசலம். iv. மேற்கூறிய யாவும்.

## பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.1. சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விவசாய நடவடிக்கைகள் நான்கு தருக?

2. காடுகளின் மூடுபடைகளை அகற்றுவதால் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள் 3 தருக?

3. பயிர்ச்செய்கையின் போது நீரினால் ஏற்படும் சேதத்தை குறைத்துக் கொள்ள கூடிய விவசாய ஒழுங்குமுறைகள் 3 தருக?

4. உயிர்த்திணிவை ஏற்படுத்துவது யாது?

5. விவசாய நடவடிக்கைகள் காரணமாக சூழலிற்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கு பின்பற்றக்கூடிய பசுமை விவசாய தொழில்நுட்ப தீர்வுகள் 3 தருக?

(5 x 3 = 15 புள்ளிகள்)

02.1. உணவுடன் தொடர்புடைய கைத்தொழில்களின் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக?

2. உணவு நுகர்வுகள் தொடர்பாக நுகர்வோரிடம் காணப்படும் எதிர்பார்ப்புக்கள் 3 தருக?

3. சிறந்த உணவு உற்பத்திப்பழக்கங்களின் பிரதான நான்கு பிரிவுகளும் எவை?

4. புதிய வணிக முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி சட்ட ஆலோசனைகள் விற்பனை மேம்படுத்தல் முறைகள் மற்றும் வியாபாரத்தை பதிவு செய்தல் தொடர்பான ஆலோசனைகளால் பெற்றுக் கொள்ள இலங்கையில் காணப்படும் அரச நிறுவனங்கள் 3 தருக?

5. விற்பனையின் பின்னரான வாடிக்கையாளர் சேவை வழங்குவதன் மூலம் ஏற்படும் அனுகூலங்கள் 3 தருக?

03.1. விவசாய உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடியவாறு வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக?

2. வரையறுக்கப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகள் 3 தருக?

3. கோக்கிடாமா பயிர்ச்செய்கை என்றால் என்ன?

4. செயற்றிட்டம் ஒன்றில் பிரதான படிமுறைகள் எவை?

5. பாடசாலைத் தோட்டத்தின் ஊடாக நீங்கள் மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டத்திற்கு 3 உதாரணம் தருக?